RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 257 | செப்டம்பர்.18 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5




## தேவகோட்டை நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் குப்பை கிடங்கில் 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு வைத்தார்

தேவகோட்டை, செப். 18

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சி 27 வார்டுகள் உள்ளன. நகரின் அன்றாடம் பயன்படுத்தும் கழிவு பொருட்களை அகற்றும் பணியை நகராட்சி நிர்வாகம் சுமார் 120க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் மூலம் செய்து வருகின்றனர்.

அன்றாடம் சேகரிக்கும் குப்பைகளின் ஒரு பகுதியை இராம்நகர் மின் மயானம் எதிரே தரம் பிரித்து வந்தனர். இதனால் அப்பகுதி மக்கள் துர்நாற்றம் வீசுவதாக நகர் மன்ற தலைவரிடம் புகார் தெரிவித்தனர். இதையடுத்து பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தின் மூலம்

இந்த வளாகத்தில் நகர் மன்ற தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் ஆணையாளர் கண்ணன், நகர்மன்ற உறுப்பினர் பாலமுருகன், பவுல் ஆரோக்கியசாமி முன்னிலையில் பசுமை மரக்கன்றுகள் வேம்பு, அத்தி, தேக்கு, வாகை, பூவரசு, அகத்தி, அரசு மற்றும் பழக்கன்றுகள் மா, பலாப்பழம், கொய்யா, நெல்லிக்காய் என சுமார் 240 க்கும் மேற்பட்ட கன்றுகளை வைத்தார்கள்.

நகராட்சி சுகாதார துறை அலுவலர் பாண்டிச்செல்வம் பொதுமக்கள் குப்பைகளில் போட்ட குளிர்சாதன பெட்டி, ஐஸ் பாக்ஸ், காய்கறி கூடை இது போன்ற பொருட்களை இந்த வாளகத்தில் வைத்து அதில் கழிவு நீர் கால்வாயில் அள்ளிய மண், மக்கிய குப்பைகளை போட்டு கத்தரிக்காய், தக்காளி, மிளகாய் இது போன்ற காய்கறி செடிகளை வைத்துள்ளனர்.

இதனால் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்நிகழ்ச்சியில் நகராட்சி சுகாதார துறை ஆய்வாளர், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.



## தனைரா புதிய புடவை தொகுப்பு மற்றும் பிரச்சாரம் மூலம் பண்டிகைக்காலத்திற்கு தயாராகிறது

மதுரை, செப்.18

டாடா நிறுவனத்திலிருந்து பெண்களின் பாரம்பரிய உடைகள் நிறுவனமாகப் புகழ்பெற்ற தனைரா பண்டிகைக்கால புடவைத் தொகுப்பான 'மியாரா' வை புதிதாக அறிமுகப்படுத்தி இருக்கிறது. பண்டிகைக் கால கொண்டாட்டத்தை மேலும் உற்சாகமானதாக மாற்றும் வகையில் 'தி கிஃப்ட் ஆஃப் பியூர் லவ்'என்ற தனைராவின் சமீபத்திய பிரச்சாரமானது, புடவையை பண்டிகைகளின் போது நம்முடைய மாறாத அன்பின் பரிசாக அளிக்க உற்சாகப்படுத்துகிறது. பரிசளிப்பதின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் தருணத்தை இப்பிரச்சாரம் வலியுறுத்துகிறது. எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாத தூய்மையான அன்பை நாம் பார்க்கமுடியாது, ஆனால் அதை உணரமுடியும் என்பதை இந்தப் பிரச்சாரம் முன்மொழிகிறது.

தனைராவில் வாங்கும் ஒவ்வொரு புடவையையும் மறக்க முடியாத தருணமாக்கும் வகையில், பண்டிகைக்கால சிறப்பு தள்ளுபடிகளையும், பரிசு கூப்பன்கள் மற்றும் தங்க நாணயங்களுடன் இந்த மாபெரும் விற்பனை திருவிழாவில் அறிமுகப்படுத்துகிறது தனைரா. வாடிக்கையாளர்கள் மொத்தமாக 10,000 ரூபாய் மதிப்பில் ஒவ்வொரு முறை வாங்கும் போதும், அவர்களுக்கு 1,000 மதிப்புள்ள வவுச்சர்கள் வழங்கப்படும். 50 ஆயிரத்துக்கு மேல் வாங்குபவர்களுக்கு 0.2 கிராம் தனிஷ்க் தங்க நாணயம் சிறப்பு பரிசாக வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட காலம் வரை மட்டும் வழங்கப்படும் இந்த தள்ளுபடி சலுகை அக்டோபர் 20, 2025 வரை மட்டுமே பொருந்தும். தனைரா கோல்டன் குக்கூன் கொள்முதல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் வாடிக்கையாளர்களுக்கு தங்களது கனவு புடவைகளை வாங்குவதற்கு உதவுகிறது என தனைரா செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது

# அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாத புதிய இந்தியா இது: பிரதமர் மோடி



தார்: செப்.18-

அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாத புதிய இந்தியா இது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலால் ஜெய்ஷ் இ முகம்மது இயக்கத்தின் தலைவர் மசூத் அசாரின் குடும்பம் மொத்தமாக அழிக்கப்பட்டுவிட்டதாக அந்த அமைப்பைச் சேரந்த முக்கியத் தீவிரவாதி ஒருவர் நேற்று பேசிய நிலையில், அதைச் சுட்டிக்காட்டி பிரதமர் மோடி இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் மோடி உரை: மத்தியப் பிரதேசத்தின் தார் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் பெண்கள், இளைஞர்கள், ஏழைகள், விவசாயிகள் ஆகிய 4 தூண்கள் உள்ளன. இன்று இந்த 4 தூண்கள் தொடர்பான திட்டங்கள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. நமது பெண்கள் சக்தி நாட்டின் முன்னேற்றத்துக்கு அடித்தளம். தாய் ஆரோக்கியமாக இருந்தால் முழு வீடும் நன்றாக இருக்கும். ஒரு தாய் நோய்வாய்ப்பட்டால், முழு குடும்பத்தின் அமைப்பும் நொறுங்குகிறது. அதனால்தான், ஆரோக்கியமான பெண்கள், வலுவான குடும்பம் எனும் பிரச்சாரம் நமது தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

பாரத தாயின் பாதுகாப்புக்கு நாடு மிகுந்த முன்னுரிமை கொடுக்கிறது. பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நமது சகோதரிகள் மற்றும் மகள்களின் குங்குமத்தை அகற்றினர். அதற்கு பதிலடியாக, ஆபரேஷன் சிந்தூர் மூலம் பயங்கரவாத முகாம்களை அழித்தோம். நமது துணிச்சலான ஆயுதப் படைகள் கண்ணிமைக்கும் நேரத்தில் பாகிஸ்தானை மண்டியிடச் செய்தன. நேற்று மற்றொரு பாகிஸ்தான் பயங்கரவாதி தனது துயரத்தை கண்ணீருடன் விவரித்ததை நாடும் உலகமும் கண்டது. இது ஒரு புதிய இந்தியா. இது யாருடைய அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாது" என தெரிவித்தார்.

பாகிஸ்தான் பயங்கரவாதியின் பேச்சு: ஜெய்ஷ்இமுகம்மது அமைப்பின் கமாண்டரான மசூத் இலியாஸ் காஷ்மீரி என்பவர், பாகிஸ்தானில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகள் புடைசூழ மேடையில் பேசும் மசூத் இலியாஸ் காஷ்மீரி, இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலின் பாதிப்பு குறித்து உணர்ச்சிபொங்க பேசியுள்ளார்.

அவர் தனது பேச்சில், "இந்த நாட்டின் (பாகிஸ்தானின்) எல்லைகளைப் பாதுகாக்க பயங்கரவாதத்தை தழுவினோம். டெல்லி, காபூல், கந்தஹார் மீது தாக்குதல்களை நடத்தினோம். அனைத்து தியாகங்களையும் செய்த பிறகு, மே 7ம் தேதி பஹவல்பூரில் இந்திய படைகள் நடத்திய தாக்குதலில் மவுலானா மசூத் அசாரின் குடும்பம் பூண்டோடு அழிக்கப்பட்டது" என்று தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூரின்போது பாகிஸ்தானின் பஹவல்பூரில் இந்திய விமானப்படை நடத்திய தாக்குதலில் மசூத் அசாரின் மனைவி உட்பட குடும்ப உறுப்பினர்கள் 10 பேர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்தன. இந்நிலையில், ஜெய்ஷ்இமுகம்மது அமைப்பின் முக்கிய கமாண்டர் ஒருவர் இதனை உறுதிப்படுத்தி இருப்பது, இந்திய ராணுவத்தின் தாக்குதலின் தீவிரத்தை உறுதிப்படுத்தி இருக்கிறது.

# இமாச்சல், உத்தராகண்ட் மாநிலத்தில் நிலச்சரிவு: கனமழை, வெள்ளத்தால் போக்குவரத்து கடுமையாக பாதிப்பு



புதுடெல்லி, செப்.18-

இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், டெல்லி, உத்தராகண்ட் உள்ளிட்ட வட மாநிலங்களில் கடந்த சில மாதங்களாக பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் மலைப்பாங்கான பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்நிலையில் இமாச்சல பிரதேசத்தின் மண்டி மாவட்டம் தரம்பூர் நகரில் நேற்று முன்தினம் இரவு மேகவெடிப்பு காரணமாக தொடங்கிய கனமழை விடிய விடிய கொட்டித் தீர்த்தது. இதனால் தரம்பூர் பேருந்து நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது. சில பேருந்துகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பல பேருந்துகள், கடைகள், நீரேற்று நிலையம் உள்ளிட்டவை சேதமடைந்தன.

இதுபோல நிஹ்ரி பகுதியில் உள்ள ஒரு குன்றிலிருந்து பாறை உருண்டு வந்து ஒரு வீட்டின் மீது விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர். 2 பேர் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டனர். இந்த தகவலை மண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாக் ஷி வர்மா தெரிவித்தார். சிம்லா அருகே ஏற்பட்ட நிலச்சரிவில் பல வாகனங்கள் புதைந்தன. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்டின் டேராடூன் நகரிலும் நேற்று முன்தினம் இரவு கனமழை கொட்டியது. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஓட்டல்கள், கடைகள், வணிக வளாகங்கள் சேதமடைந்தன. வெள்ளம் காரணமாக சுஹாஸ்த்ரதாரா ஆறு கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் சுஹாஸ்த்ரதாரா சாலையில் உள்ள ஓட்டல்கள், கடைகள் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி பார்வையிட்டார். பின்னர் முதல்வர் தாமி கூறும்போது, "மாநில பேரிடர் மீட்புப் படையினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக உள்ளூர் நிர்வாகத்தை அவ்வப்போது தொடர்பு கொண்டு நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகிறேன்" என்றார். இதனிடையே, பிரதமர் நரேந்திர மோடியும் உள் துறை அமைச்சர் அமித் ஷாவும் உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியை தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையை கேட்டறிந்தனர். மேலும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு தேவையான உதவிகளை செய்ய மத்திய அரசு தயாராக இருப்பதாக அவர்கள் தாமியிடம் உறுதி அளித்துள்ளனர்.

# 'முகமூடியார் பழனிசாமி' என்று இனி அழைப்போம்: டிடிவி விமர்சனம்



சென்னை, செப்.18-

'23ம் புலிக்கேசி' பட பாணியில் இன்று முதல் எடப்பாடி பழனிசாமியை 'முகமூடியார்' பழனிசாமி என்று அழைக்க வேண்டும் என்று இபிஎஸ் அமித் ஷா சந்திப்பு குறித்து அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் காட்டமாக விமர்சித்துள்ளார்

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "செப்.15ம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் எப்படி எல்லாம் எடப்பாடி பழனிசாமி வீர வசனம் பேசினார். 'நான் தன்மானம் மிக்கவன்', 'எனக்கு ஆட்சி அதிகாரம் முக்கியம் அல்ல', என்றெல்லாம் பேசினார். மேலும், பத்திரிகைகளில் அவரது பயணம் தள்ளி வைக்கப்பட்டது தொடர்பாக வெளிவந்த செய்திகளுக்கு கோபித்துக் கொண்டவர், வானிலையை காரணம் காட்டி தள்ளி வைத்ததாக கதை விட்டார்.

தற்போது புதிதாக தேர்வு செய்யப்பட்ட குடியரசு துணைத் தலைவர் சி.பி ராதாகிருஷ்ணனை சந்தித்துவிட்டு, இரவு அமித் ஷாவை சந்தித்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. அமித் ஷா எடப்பாடி பழனிசாமிக்கு அழைப்பு விடுத்து இருப்பதாக ஏற்கனவே, ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துவிட்டன. இவைதான் பத்திரிகைகளில் செய்தியாக வெளி வந்தன. இதற்கு எல்லாம் பொய் சொல்லி எடப்பாடி பழனிசாமி யாரை ஏமாற்ற பார்க்கிறார்?.

தமிழக மக்களையும், மற்ற அரசியல் கட்சிகளையும் இனிமேலும், எடப்பாடி பழனிசாமியால் ஏமாற்ற முடியாது. டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி அமித் ஷாவை சந்தித்த பின் வெளி வந்தவர் ஏன் முகத்தை முடிக்கொண்டு சென்றார் ?.

'23ம் புலிக்கேசி' பட பாணியில் இன்று முதல் எடப்பாடி பழனிசாமியை முகமூடியார் பழனிசாமி என்று அழைக்க வேண்டும். எடப்பாடி பழனிசாமி சொல்வது எல்லாம் பொய். சிலர் எடப்பாடி பழனிசாமி செய்யும் துரோகத்தை ராஜதந்திரம் என்று கூறுகின்றனர். ஆட்சி பொறுப்பில் உள்ளார் என்பதற்காக அப்போது ஆதரித்துப் பேசிய சிலர் இப்போது அவருக்கு எதிராக பேசி வருகின்றனர்.

எம்ஜிஆர், ஜெயலலிதா வெற்றி கண்ட இரட்டை இலை சின்னத்தை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டு மக்களை எடப்பாடி பழனிசாமி ஏமாற்றப் பார்க்கிறார். என்னதான் பண பலம், படை பலம் இருந்தாலும் வரவிருக்கும் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி தோல்வியை தழுவுவது உறுதி." என்று தினகரன் கூறினார்.

முன்னாதாக டெல்லியில் உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்த அதிமுக எடப்பாடி பழனிசாமி, அவருடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் அமித் ஷா வீட்டில் இருந்து காரில் வெளியேறிய பழனிசாமி தனது முகத்தை மறைத்துக் கொண்டதாக காணொலி ஒன்று இணையத்தில் வைரலாகின என்பது குறிப்பிடத்தக்கது.



# தாம்பரம் சண்முகம் சாலையில் தந்தை பெரியார் திருவுருவ படத்திற்கு விசிக சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தபட்டது

தாம்பரம், செப்.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தெற்கு மாவட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் கொண்டாடபட்டது. இதை யொட்டி தாம்பரம் சண்முகம் சாலையில் மலர்களால் அலங்கரித்து வைக்கபட்ட தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு தாம்பரம் மாநகர தெற்கு மாவட்ட செயலாளர் சாமுவேல் எபிநேசர் மலர் துவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து மாநில துணை செயலாளர் சமூக ஊடகம் தாம்பரம் கதிரவன், பொறி யாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயசந்திரன், நகர செயலாளர்கள் ராமானுஜம், ஆதிசாலமன் நிர்வாகிகள் அற்புதராஜ், ரமேஷ்,சார்லஸ், ஸ்டான்லி, மின்னல் ஜான் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் வட்டாரத்திற்குட்பட்ட பகுதியில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு மருத்துவமுகாம்

கன்னியாகுமரி, செப்.18-

தமிழ் நாட்டை நோயில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமினை தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.08.2025 அன்று சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் அனைத்து வகையான உடல் பரிசோதனைகளும், 17 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சைகளும், முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்று திறனாளி களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவமுகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிட்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இதயநல சிறப்பு மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரிழிவு நோய்கான சிறப்பு மருத்துவம், தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம், கண் சிறப்பு மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், இயற்கை மருத்துவம், உணவியல் ஆலோசணை ஆகிய 17 சிறப்பு மருத்துவ சிகிட்சை, சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படஉள்ளது. இம்முகாமில் அனைத்து சிகிட்சைகளும் பரிசோதனைகளும் ஆன்லைன் பதிவு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை நமது மாவட்டத்தில் நடைபெற்ற ஆறு முகாமில் 11,162 பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ஏழாவது முகாம் மேல்புறம் வட்டாரத்திற்குட்பட்ட படந்தாலமூடு செக்ரட் ஹார்ட் மெட்ரிக் பள்ளி வாளகம், 20.09.2025 அன்று நடைபெறவுள்ளது. இந்த முகாம் பகுதிக்குட்பட்ட களியக்காவிளை பேரூராட்சி, வன்னியூர், மலையடி, மருதங்கோடு, விளவங்கோடு உள்ளிட்ட ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, கேட்டுக்கொள்கிறார்கள்.



■ தேனி மாவட்டம் கொடுவிலார்பட்டி கம்மவார் சங்கம் தொழில்நுட்பக்கல்லூரியில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கல்லூரி மாணவ, மாணவியர்கள் எடுத்துக்கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் சமூக நீதி உறுதிமொழி அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டது

# செப்டம்பர் 2025ம் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

மதுரை, செப்.18-

மதுரை மாவட்ட விவசாயிகளின் குறைகளைத்தீர்க்கும் வண்ணம், ஒவ்வொரு மாதமும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான மதுரை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் 19.09.2025 அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் விவசாயம் தொடர்புடைய அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொள்கிறார்கள்.

விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை மனுக்களாக, மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக சமர்ப்பிக்கலாம் என்ற விபரத்தினை மதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கிறார்.

# GM செஸ் அகாடமியின் மாநில அளவிலான சதுரங்க போட்டி நடைபெற்றது

கௌரிவாக்கம், செப்.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த கௌரிவாக்கத்தில் உள்ள பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலைக் கல்லூரியில் 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று GM செஸ் அகாடமியின் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் அதன் செயலாளர் மாசிலாமணி அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

8 வயது 10 வயது 13 வயது மற்றும் 25 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்த சதுரங்க போட்டிகளை காலை 9 மணிக்கு செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் துவக்கி வைத்தார்.

.செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் என



தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுமார் 250 கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஆண்கள் பெண்கள் என அனைவருக்கும் ஆறு சுற்றுகளாக நடைபெற்ற இந்த போட்டிகள் மாலை 3 மணி அளவில் நிறைவு பெற்றது.

இந்த போட்டிகளில் ஆண்கள் பெண்கள் என தனித்தனியே முதல் முப்பது இடங்களை பிடித்த 160 பேர்களுக்கு மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக துணைத் தலைவர் வழக்கறிஞர் சந்திரசேகரன், செங்கல்பட்டு மாவட்ட குற்றவியல் அரசு வழக்குரைஞர் காயத்ரி அவர்களும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கோப்பைகளையும் பதக்கங்களையும் வழங்கி சிறப்பித்தனர்.

இந்த போட்டிகளில் கலந்து கொண்ட எட்டு வயதுக்கு உட்பட்ட அனைத்து வீரர்களுக்கும் அவர்களை உற்சாகபடுத்தும் விதமாக பதக்கங்கள் வழங்கப்பட்டன. இதனால் இளம் வயது வீரர்கள் உற்சாகமடைந்து மகிழ்ச்சியுடன் சென்றனர்.

இந்த சதுரங்க போட்டிகளில் கலந்து கொண்ட சுமார் 200க்கும் மேற்பட்டோர் பரிசுகளை தட்டி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்து வீரர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும் இந்த பரிசளிப்பு விழாவில் சதுரங்க போட்டியின் நடுவரான சர்வதேச சதுரங்க நடுவர் பூர்ணிமா பாலா, GM செஸ் அகாடமியின் பொருளாளர் ஹரிஷ் அரவிந்த், செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள், பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலைக்கல்லூரியின் நிர்வாகிகள் ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோவிலில் 19.09.2025 அன்று தமிழிசை விழா நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, செப்.18-

தமிழிசை மூவரான முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாச்சலக் கவிராயர் ஆகியோரால் கீர்த்தனைகள் மற்றும் இசைப்பாடல்களால் வளர்க்கப்பட்ட தொன்மையான தமிழிசையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில், 2025 2026 ஆம் ஆண்டிற்கான சட்ட மன்ற அறிவிப்பில் அனைத்து மாவட்டங்களிலும் தமிழிசை விழா நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, திருநெல்வேலி, மண்டலக் கலை பண்பாட்டு மையம் வாயிலாக, தென்காசி மாவட்டத்தில், 19.09.2025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோவிலில், தமிழிசை விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் புகழ்பெற்ற இசைக் கலைஞர்களின், மங்கள இசை, தமிழிசை, பரதநாட்டியம், நாட்டிய நாடகம், தேவாரம், மற்றும் கருவி இசை ஆகிய இசை நிகழ்ச்சிகள் 50 கலைஞர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவில் இசைக் கலைஞர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, செப்.18-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அரசு இசேவை மையம் மூலமாக எளிய முறையில் விண்ணப்பித்திடலாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முதலமைச்சரின் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் சமூக பொருளதார மேம்பாட்டிற்காக தொழில் முனைவுத் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடமை திட்டம் மற்றும் PM-AJAY போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களில் பயன்பெற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மற்றும் மாவட்ட மேலாளர் அலுவலகம் வாயிலாக விண்ணப்பங்களை பதிவு செய்து வருகிறார்கள். இதனை எளிமைப்படுத்தும் விதமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள், அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலுள்ள தமிழ்நாடு அரசு இசேவை மையத்தின் வாயிலாக தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் CM-ARISE, PM-AJAY மற்றும் நன்னிலம் மகளிர் நில உடமை திட்டம் ஆகியவைகளின் கீழ் விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்கள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற தமிழ்நாடு அரசு இசேவை மையங்கள் மூலமாக விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



■ சிவகங்கை மாவட்டம் சாலைக்கிராமத்தில் நேற்று செப்டம்பர் 17 இல் இந்திய பிரதமர் மோடி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தெற்கு ஒன்றிய பா.ஜ.,வினர் சார்பில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் மக்களுக்கு கேக் வெட்டி இனிப்புகளை வழங்கினர். நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ராஜ பிரதீப், முன்னாள் மாவட்ட செயலாளர் சங்கர சுப்ரமணியன்,ஒன்றிய தலைவர் செல்லக்குட்டி பாலமுருகன்,முன்னாள் ஒன்றிய தலைவர் சிலம்பரசன், செயலாளர் மணிமேகலன்,பிரபுதேவா மற்றும் நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில், 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான

# மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகளில் காலியாகவுள்ள டெக்னீஷியன் இடங்களுக்கான பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில், தகுதிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.18-

சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில், 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகளில் காலியாகவுள்ள 18 மயக்க மருந்து டெக்னீஷியன் மற்றும் 19 தியேட்டர் டெக்னீஷியன் இடங்களை, மாவட்ட அளவில் நிரப்புவதற்கான சேர்க்கைக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகுதிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அத்தகுதிப் பட்டியல் தொடர்பான விபரங்கள் www.gsmch.ac.in <http://www.gsmch.ac.in> என்ற இணையதளத்தின் வாயிலாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலக அறவிப்பு பலகை மற்றும் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி அறிவிப்பு பலகை வாயிலாகவும் அறிந்து கொள்ளும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மாணாக்கர்கள் தங்களது அசல் சான்றிதழ் மற்றும் நகல்களுடன் வருகின்ற 20.9.2025ஆம் தேதிக்குள் முதல்வர், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி என்ற முகவரியில் நேரில் அணுகி சேர்க்கை பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் மரு.சீனிவாசன் மற்றும் சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வர் ஆகியோர் உடனிருந்தனர்.




## தந்தை பெரியார் பிறந்த நாளினையொட்டி

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை அனைத்து அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்

கன்னியாகுமரி, செப்.18-

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை தமிழ்நாடு அரசானது சமூக நீதி நாளாக கடைப்பிடித்து வருகிறது. அதனடிப்படையில் தந்தை பெரியாரின் 147வது பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சி ஆட்சியர் அலுவலத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டார்கள்.

தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப அவர்கள் தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்டோர் சமூக நீதி நாள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்த உறுதிமொழியில் பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும்யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறை களாகக் கடைப் பிடிப்பேன். சுயமரி யாதை ஆளுமைத்திறனும் - பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும். சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன். மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன். சமூகநீதியையே அடித்தளமாக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கு.சுகிதா (பொது), கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவமனை கல்லூரி முதல்வர் மரு.ஜெ.கிளாரன்ஸ் டேவி, தனித்துணை ஆட்சியர் சமூகபாதுகாப்பு திட்டம் திரு.சேக் அப்துல் காதர், உசூர் மேலாளர்கள் தாஜ் நிஷா, விஜயலெட்சுமி, துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மொத்தம் 883 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 9,170 உறுப்பினர்களுக்கு ரூபாய் 76.14 கோடி மதிப்பீட்டிலான வங்கிக்கடன் இணைப்பிற்கான ஆணைகள் மற்றும் 3,810 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்




சிவகங்கை, செப்.18-

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் கானொலி காட்சி வாயிலாக நடத்தப்பட்ட, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பிற்கான ஆணைகள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் விழாவினை தொடர்ந்து, சிவகங்கை பகுதிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பி ற்கான ஆணைகள் மற்றும் அடையாள அட்டைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் முன்னிலையில் வழங்கி தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய துணை கண்டத்தில் தலைசிறந்த மாநிலமாக தமிழகம் திகழ்கின்ற வகையில், எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக கொண்டுள்ளதால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் தமிழகத்தினை பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக திகழ்கின்ற வகையில், தொலைநோக்கு சிந்தனையுடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதில் குறிப்பாக, ஆணுக்க பெண் சமம் என்ற நிலையை அனைத்திலும் உருவாக்கிடும் பொருட்டு, பெண்கள் தற்சார்ப்பு நிலையை அடைந்திடும் வகையில், பெண்களின் முன்னேற்த்திற்கென கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு 1989ஆம் ஆண்டு, தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்க தொடங்கியது.

அவ்வாறாக, மகளிரின் முன்னேற்றத்திற்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு பார்வையில், துவங்கப்பட்ட இத்திட்டமானது, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் துவங்க வங்கி கடன் இணைப்புகளை ஏற்படுத்தி சுய உதவிக்குழு இயக்கத்தையும் வலுப்படுத்தி வருகிறது.

அதுமட்டுமன்றி, தற்போது நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சிறப்புக் குழுக்களும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, சுய உதவிக்குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச்செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மாநில நகர்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய மூன்று முக்கியத் திட்டங்களை மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகள், நகர்புற பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட வட்டாரங்களில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உழைப்பு மட்டுமன்றி, நாணயத்திலும் நற்சான்று பெற்றவர்களாக திகழ்ந்து வருகிறீர்கள். தங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கென மகளிர் திட்டத்தின் வாயிலாக பல்வேறு வகையான கடனுதவிகளை இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, மாண்புமிக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் கடனுதவிகள் மட்டுமன்றி, மகளிர் சுயஉதவிக்குழுகளைச் சார்ந்த உறுப்பினர்களின் கோரிக்கை யினை ஏற்று, சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வையும் இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் தொடங்கி வைத்து சிறப்பித்துள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளைச் சார்ந்த 733 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 74.21 கோடி மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பிற்கான ஆணைகளையும், 60 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 0.60 கோடி மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதிக்கான ஆணைகளையும், ரூபாய் 0.12 கோடி மதிப்பீட்டில் 25 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு வட்டார வணிக வள மைய கடனுதவிக்கான ஆணைகளையும், 65 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூபாய் 1.14 கோடி மதிப்பீட்டில் தனிநபர் தொழில் முனைவோர் கடனுதவிக்கான ஆணைகளையும் என ஆக மொத்தம் இந்நிகழ்ச்சியின் வாயிலாக 883 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 9,170 உறுப்பினர்களுக்கு ரூபாய் 76.14 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்பிற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அதில், கூட்டுறவுத்துறையின் சார்பில் மட்டும் 272 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூபாய் 29.89 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வினை தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் 3,810 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, பெண்களின் உரிமையை நிலைநாட்டுகின்ற வகையில், தமிழகத்தில் பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு, பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தி வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மகளிர் சுய உதவிக்குழுக்களின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி என்.கவிதப்பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.இராஜேந்திர பிரசாத், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி உமா மகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.பிரவீன் குமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்ற துணை தலைவர் திரு.கார்கண்ணன் மற்றும் உதவி திட்ட அலுவலர் திரு.சின்னதுரை உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

சிவகங்கை முத்துப்பட்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில்,

## காலியாகவுள்ள குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளுக்கான நேரடி மாணவர் சேர்க்கை வருகின்ற 30.9.2025 ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.18-

சிவகங்கை மாவட்டம், முத்துப்பட்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான நேரடி சேர்க்கை வருகின்ற 30.9.2025 ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள FITTER, COPA (COMPUTER OPERATOR AND PROGRAMMING ASSISTANT), ADVANCED CNC MACHINING TECHNICIAN, INDUSTRIAL ROBOTICS & DIGITAL MANUFACTURING TECHNICIAN, MECHANIC ELECTRIC VECHICLE ஆகிய தொழிற்பிரிவுகளில் காலியாக உள்ள இடங்க ளுக்கான மாணவர்கள் சேர்க்கை யானது, நேரடி சேர்க்கை மூலம் கடந்த வருகின்ற 30.9.2025 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. மேற்குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் சேர மாணவர்கள் கட்டாயம் SSLC (10ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும், நேரடி சேர்க்கைக்கு மாணவர்கள் சிவகங்கை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் வந்து விண்ணபித்திடல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்க மாணவர்கள் வருகைபுரியும் பொழுது, தங்களது நிரந்தர தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, மதிப்பெண் சான்றிதழ் (10th), சாதிசான்றிதழ், மாற்றுசான்றிதழ், பாஸ் போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை நகல் ஆகியவைகளை உடன் கொண்டு வருதல் வேண்டும்.

அதுமட்டுமன்றி, பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகை மாதம் ரூ.750/ இலவச பாடப்புத்தகங்கள், விலையில்லா மிதிவண்டி, சீருடைகள், காலணிகள், இலவச பஸ்பாஸ் ஆகியவைகளும் பெற்று வழங்கப்படும்.

மேலும், புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.1,000/ பெற்று வழங்க வழிவகை செய்யப்படும். பயிற்சியின் போது பிரபல தொழில் நிறுவனங்களில் பயிற்சியும், பயிற்சிகாலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும்.

நேரடி சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9944887754, 9965480973, 9943610476, 9489476847, 9942099481 ஆகிய அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---





## கடையநல்லூர் தொகுதி எம்எல்ஏவுக்கு பிறந்தநாள் வாழ்த்து வீரவாள் பரிசு வழங்கினார் ஆயாள்பட்டி அருண்சங்கர்

தென்காசி, செப்.18-

தென்காசி அஇஅதிமுக வடக்கு மாவட்ட கழக செயலாளரும் கடைய நல்லூர் சட்டமன்ற உறுப்பி னருமான கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா பிறந்தநாள் விழா செங்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் வடக்கு மாவட்ட அஇஅதிமுக நிர்வாகிகளால் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது சங்கரன்கோவில் அருகே உள்ள மேல நீலிதநல்லூர் ஒன்றியத்தை சேர்ந்த ஆயாள்பட்டி றிஷிஷி. அருண் சங்கர் குமார் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் குட்டி அப்பாவுக்கு பிறந்தநாள் வாழ்த்து கோரி வீரவாள் பரிசாக வழங்கினார் அவருடன் மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் கே. பெரியதுரை பாண்டியன் மற்றும் ஆயாள்பட்டி வழக்கறிஞர்கள் முனீஸ் பாண்டி, குருக்கள்பட்டி மானிஸ், திருமலாபுரம் ரஞ்சித் குமார், ஜெனித் பாண்டியன் ,இளங்குமரன்,சட்டக் கல்லூரி மாணவர் சந்துரு , நெற்கட்டும்செவல் சிவா, கரிசல் குளம் குணா ஆயாள்பட்டி அருள் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினார்கள். சவுதி அரேபியா அம்மாபேரவை செயலாளர் எஸ். எம் .மைதீன். வர்த்தக அணி துணைத்தலைவர் தளவாய் சுந்தரம் கடையநல்லூர் நகர இளைஞரணி செயலாளர் ராஜேந்திர பிரசாத் துணைச் செயலாளர் வெங்கட்ராஜ் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாரியப்பன் மாவட்ட சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் இடைகால் நியாஸ் மைதீன் உட்பட ஏராளமானோர் சட்டமன்ற உறுப்பினர் குட்டியப்பாவை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்..

---

## தமிழ்நாடு முதலமைச்சர் வருகின்ற 19.9.2025 அன்று சென்னை, காந்தி மண்டபத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் திருவுருவச்சிலையினை திறந்து வைத்து, சிறப்பிக்கவுள்ளார்

சிவகங்கை, செப்.18-

சுதந்திரப் போராட்டத்திற்கு பாடுபட்ட தியாகச்செம்மல்களை என்றென்றும் போற்றி பாதுகாக்கும் வண்ணம், நினைவு மண்டபங்கள் அமைத்து பாதுகாத்து வந்தத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். அவ்வழியில் சிறப்பான ஆட்சியினை தமிழகத்தில் நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழர்களின் அளப்பறியாப் பங்கு குறித்தும், வீரர்களின் தியாகம் குறித்தும், போராட்டங்கள் குறித்தும், தாய்மொழியான தமிழ்மொழி குறித்தும், வீரம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளில் பங்கு பெற்ற முன்னோர்களை கௌரவிக்கும் பொருட்டும், இதனை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்தவகையில், இந்திய வரலாற்றில் முதல் பெண்மணியாக சுதந்திரத்திற்காக தனித்து நின்று போராடிய வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில், சிவகங்கை மாவட்டத்தில், இவ்வீரப் பெண்மணிக்கு நினைவு மண்டபம், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப் பட்டுள்ளது.

மேலும், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் புகழை பறைசாற்றுகின்ற வகையில், தற்போது சென்னை காந்தி மண்டபத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலையினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 19.9.2025 (வெள்ளிக்கிழமை) அன்று நேரில் வருகை புரிந்து திறந்து வைத்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இச்சீர்மிகு விழாவில், பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு சிவகங்கை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

## தோட்டக்கலைத்துறையின் மூலம் சொட்டு நீர்ப்பாசனத்திற்கு மானியம்

மதுரை, செப்.18-

மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ், தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு/ குறு விவசாயிகளுக்கு 100% மானியமும் இதர விவசாயிகளுக்கு 75% மனியமும் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்/ தெளிப்பு நீர் பாசன முறையை பின்பற்றுவதால் 30-40% வரை நீர் சேமிக்கப்படுகிறது. பாசன நீரானது தாவர வேரின் பக்கத்தில் மட்டும் செல்வதனால் களைகள் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. Fertigation முறையில் நீருடன் உரம் கலந்து செலுத்துவதால் உரத்திற்கான செலவு குறைவதுடன் மகசூல் அதிகரிக்கிறது. மேலும் தற்சமயம் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே வருவதால் இம்முறையின் பயன்பாடு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை கருத்தில் கொண்டு இவ்வாண்டு ரூ.1039 இலட்சம் மானியம் மதுரை மாவட்ட தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.200 இலட்சம் ஆதி திராவிட இனத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. தாட்கோ மூலம் மின் இணைப்பு பெற்ற விவசாயிகள், நிலம் பெற்ற பயனாளிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். மேலும் இத்திட்டத்தின்கீழ் தானியங்கி நீர் பாசன அமைப்புகள் (Automation) அமைப்பதற்கு ஒரு எக்டருக்கு ரூ.20,000/ மானியம் வழங்கப்படுகிறது. இதனை அமைப்பதன் மூலம் பயிர்களுக்கு சரியான நேரத்தில் பயிரின் அளவிற்கு தகுந்த நீர் வழங்கப்படுவதால் பயிரின் மகசூல் அதிகரிக்கும், விவசாயிகளின் நேரம் மற்றும் உழைப்பை குறைக்கலாம், உரங்கள் மற்றும் நீர் சம நிலையில் வழங்கப்படுவதால் மண் சத்து மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சொட்டுநீர் பாசன அமைப்பு பெறுவதற்கு குடும்ப அட்டையின் நகல், கணினி மூலம் பெறப்பட்ட சிட்டா/ அடங்கல், நிலவரைபடம் மற்றும் சிறு/ குறு விவசாயிகளுக்கான வட்டாட்சியரின் சான்று ஆகிய தேவையான ஆவணங்களை மதுரை தோட்டக்கலைத்துறை வட்டார அலுவலகத்தில் சமர்ப்பித்து பயன் பெறலாம் மற்றும் (<http://tnhorticulture.tn.gov.in/>) என்ற இணையத்தில் தாங்களே தங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம் என மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---



## "சமூக நீதி நாள் உறுதிமொழி" ஏற்பு

மதுரை, செப்.18-

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மாநகராட்சி துணை மேயர் திரு.தி.நாக ராஜன் அவர்கள், துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாபுதீன் அவர்கள் ஆகியோர் தலைமையில் "சமூக நீதி நாள் உறுதிமொழி யினை அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர்.

தந்தை பெரியார் பிறந்த தினமான செப்டம்பர் 17 ஆம் நாள் ஆண்டுதோறும் "சமூகநீதி நாள்" ஆக கொண்டாடும் விதமாக அனைத்து அரசு அலுவலங்களிலும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள தமிழ்நாடு அரசு உத்தரவிடப்பட்டுள்ளது.

உறுதிமொழி

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும், எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன். சுயமரியாதை ஆளுமைத் திறனும் பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும். சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன். மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன். சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதி ஏற்கிறேன் என அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் உதவி ஆணையாளர் (பணி) அருணாச்சலம், உதவி ஆணையாளர் (கணக்கு) திரு.வெங்கடரமணன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி ஆணையாளர் திரு.மணிமாறன், கண்காணிப்பாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்,



# ஓசோன் தின விழா கீழக்கோட்டை நடுநிலை பள்ளி தலைமை ஆசிரியை தெய்வானை தலைமையில் நடைபெற்றது

காளையார் கோவில், செப்.18-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கீழக்கோட்டையில் உலக ஓசோன் தினவிழா கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்றார். 2025 ஆம் ஆண்டிற்கான உலக ஓசோன் தினத்தின் அதிகார ப்பூர்வ கருப்பொருள் "வாழ்க்கைக்கான ஓசோன்" (Ozone for Life) என்பதாகும். ஓசோன் படலம் சூரியனில் இருந்து வரும் தீங்கு விளைவிக்கும் புற ஊதா கதிர்களை உறிஞ்சி பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் பாதுகாக்கிறது. இந்தப் படலம் சிதைவடைவதைத் தடுக்கவும் பூமியின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். வளிமண்டலத்தில் 20கிமீ முதல் 80 கிமீ வரை உள்ள ஓசோன் வாயு நாம் பல்வேறாகப் பயன்படுத்தி வெளியிடும் குளோரோ புளூரோ கார்பனில் உள்ள குளோரின் துகளால் எவ்வாறு ஓசோன் பிளவுபட்டு அதன் செறிவு குறைவின் காரணமாக புறஊதா கதிர்கள் மூலம் பாதிப்புக்கு உள்ளாகிறது. ஓசோன் சிதைவு மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது என்பதை தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மாவட்டச் செயலாளர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தெளிவாக எடுத்துக் கூறினார். மரம் நடுவோம். மழை பெறுவோம் என்ற முழக்கங்களுடன் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்துவதில்லை என்றும் சிவகங்கை மாவட்டம் முழுவதும் மீண்டும் மஞ்சள் பை திட்டத்தை சுற்றுச்சூழல் இயக்கத்தால் முன்னெடுப்பது என்ற தீர்மானத்தை ஆசிரியை வாசுகி முன்மொழிய ஆசிரியை கமலம்பாய் வழிமொழிய நிறைவேற்றப்பட்டது. பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மாணவ மாணவியர்கள் பனை விதைகளைச் சேகரிக்க அழைப்பு விடுக்கப்பட்டது. பெற்றோர் கஸ்தூரி நன்றி கூறினார்.

# சிவகங்கை திராவிடர் கழகம் சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா: எம்எல்ஏ. தமிழரசி முன்னாள் எம்எல்ஏ சுப.மதியரசன் பங்கேற்பு



இளையான்குடி, செப்.18-

சிவகங்கை மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் இளையான்குடி சாலைகிராமத்தில் சுயமரியாதை இயக்கம் நூறாண்டு விழா, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா மற்றும் சுயமரியாதைச் சுடரொளி அன்னை பழனியம்மாள் முதலாமாண்டு நினைவேந்தல் படத்திறப்பு விழா என சிறப்பாக நடைபெற்றது.

அன்னை பழனியம்மாள் திரு உருவப் படத்தினை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். திக மாவட்ட காப்பாளர் வழக்கறிஞர் இன்பலாதன் மாவட்டத் தலைவர் இரா. புகழேந்தி, மாவட்ட திக சயலாளர் வைகறை சட்டமன்ற மேனாள் உறுப்பினர், வடக்கு ஒன்றிய செயலாளர் சுப. மதியரசன் , திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் , ஆறு. செல்வராசன்,திமுக மேற்கு ஒன்றியக்கழக செயலாளர் கா. வெங்கட்ராமன்,கிழக்கு வே. தமிழ்மாறன், இளையான்குடி விசிக ஒன்றியச் செயலாளர் ஜேம்ஸ் வளவன் தி க. பாலு ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர்.

மாவட்டத் துணைத்தலைவர் பழனிவேல்ராசன் வரவேற்புரையாற்றிட தலைமைக்கழக நிர்வாகிகளான இரா. பெரியார் செல்வம் , மாநில ஒருங்கிணைப்பாளர் இரா. குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு திராவிட சித்த்ந்தங்களை எடுத்து பேசினர். சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி பேசிய போது திராவிட கொள்கைகள் இந்த சமுதாயத்திற்கு இன்னும் தேவைப்படுகிறது எனவும் தந்தை பெரியார் அவர்களது கொள்கைகள் , தியாகங்கள் ஆகியவன பற்றியும் , பாசிச மோடி அரசையும் தொடர்ந்து தமிழ் மொழியையும் , தமிழ்நாட்டையும் தொடர்ந்து பாஜக மோடி அரசையும் சாடினார்.

இதனிடையே தோழர் சே. பழனியம்மாள் அவர்களது முதலாமாண்டு நினைவேந்தல் திருஉருவப்படத்தினை முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் ஆ. தமிழரசி ரவிக்குமார் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி காளிமுத்து, ஒன்றிய துணைச் செயலாளர் கருணா கரன், சாலை கிராமம் செயலாளர் நைனா முகமது , மாவட்ட பிரதிநிதி ரவிச்சந்திரன் , பெரு. ராசாராம் , அந்தோணியம்மாள் கஸ்பார், தொகுதி ஐடி விங் கி.கண்ணன் , மாவட்ட அமைப்பாளர் அனந்தவேல், ஐடி விங் ஒன்றிய அமைப்பாளர்கள் தமிழ்வாணன், ஆரோன் கிங் கிரேஸ், திலகர் , அடைக்கலம், ஆகியோர் கலந்து கொண்டனர்.




# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையில் ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ் மாரத்தான் நடைபெறவுள்ளது

கோவை, செப்.18-

ஜிகேஎன்எம் மருத்துவமனை சார்பாக இதய குறைபாடுகள் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் வகையில் ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ்' என்ற மாரத்தானின் மூன்றாம் பதிப்பு நடைபெறவுள்ளதை முன்னிட்டு கோயம்புத்தூரில் உள்ள ஜி கே என் எம் மருத்துவமனை வளாகத்தில் மாரத்தான் டிஷர்ட் மற்றும் புதிய பதக்கத்தின் வெளியீட்டு விழா ஜிகேஎன்எம் மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி குறித்து தலைமை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுச்சாமி கூறியதாவது ரன் ஃபார் லிட்டில் ஸ்டார்ஸ் 2024 இன் இரண்டாவது பதிப்பில் 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் மேலும் இதய குறைபாடுகள் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 55 குழந்தைகள், இந்த மாரத்தான் கிடைத்த நிதி உதவி மூலம் பயனடைந்தனர் கடந்த இரண்டு பதிப்புகளில் போலவே இம்முறையும் ஜி கே என் எம் மருத்துவமனையில் புற்றுநோய் மற்றும் இருதய குறைபாடுகளுக்காக சிகிச்சை பெற்று குணமடைந்த குழந்தைகள் ன,இந்த மாரத்தான் கலந்து கொள்ள உள்ளனர் கேஎம்சி அறக்கட்டளையின் ஒரு பிரிவான ஜிகே என் எம் மருத்துவமனை கோவை நகரத்தில் குழந்தைகளுக்கான இருதய பராமரிப்பு மற்றும் குழந்தைகளுக்கான புற்றுநோயில் சிகிச்சையில் முன்னோடியாக உள்ளது இந்த இரண்டு மருத்துவ பிரிவுகளுமே நவீன தொழில்நுட்பங்களுடன் உலகத்தரமான மருத்துவ கருவிகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் விஜயகுமார், குழந்தைகள் இருதய மருத்துவர் கல்யாணசுந்தரம், குழந்தைகள் ரத்தவியல் மற்றும் ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை மருத்துவர் அஜீதா, குழந்தைகள் இருதய மருத்துவர் சன்ச்சிதா ஹரிணி, உப்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் தந்தை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு தலைவர் ராஜேஷ் ஆலோசனைப்படி நேற்று திருச்சி மாவட்டம் திருவரம்பூர் தாலுகாவில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி முதியோருக்கு உணவுகள் வழங்கப்பட்டன இதில் அமைப்பின் பொதுச்செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்த்ராஜ் மாநில ஆலோசகர் ராமன் திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட துணைத்தலைவர் ஈஸ்வரி திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணை தலைவர் காந்திமதி திருச்சி மாவட்ட மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் பழனியம்மாள் மற்றும் சரவணன் தினகரன் சார் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..




# நான்கு வழிச்சாலையாக உள்ள அனைத்து சாலைகளும் ஆறு மற்றும் எட்டு வழி சாலையாக மாற உள்ளது

பல்லாவரம், செப்.18-

ஐடி துறையை ஒப்பிடும்போது அதிக சம்பளத்துடன் நெடுஞ்சாலைத் துறையில் அதிகப்படியான பணிகள் இருப்பதாக நெடுஞ்சாலை துறையின் முதன்மை பொறியாளர் பேச்சு.

தாம்பரம் கட்டிட பொறியாளர் சங்கம் சார்பாக பொறியாளர் தினம் மற்றும் எக்செலென்ஸ் இன் இன்ஜினியரிங் என்ற விருது வழங்கும் விழா பல்லாவரத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

கட்டிடத்துறையில் சிறந்து விளங்கும் 100க்கும் மேற்பட்ட பொறியார்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது .

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின் முதன்மை பொறியாளர் ஆர். கிருஷ்ணசாமி மேடையில் பேசுகையில் இளம் கட்டுமான பொறியாளர்கள் தங்கள் துறையில் சிறந்து விளங்கும் வகையில் ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் பேசியஅவர் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் விரைவில் விரிவுபடுத்த இருப்பதாகவும் நான்கு வழி சாலைகள் அனைத்தும் ஆறு மற்றும் எட்டு வழி சாலைகள் மாற்றம் அடையும் என கூறினார். ஐ.டி துறையை ஒப்பிடும்போது அதிக சம்பளத்துடன் நெடுஞ்சாலை துறையில் அதிகப்படியான வேலை வாய்ப்புகள் இருப்பதாகவும் இதனை பொறியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் ஒப்பந்ததாரர்கள் அடிப்படையிலும் அதிகப்படியான வேலைகள் மாநிலம் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் காத்து கிடப்பதாகவும் இதனை இளம் பொறியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்



பழனியில் தந்தை பெரியார் பிறந்த தினத்தை முன்னிட்டு

# தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக நிர்வாகிகள் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

திண்டுக்கல், செப்.18-


திண்டுக்கல் மாவட்டம் பழனி ஆர் எஃப் ரோட்டில் அமைந்துள்ள. சீர்திருத்தத்திற்காகவும், சாதியை அகற்றுவதற்காகவும், மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுதலைக்காகவும் போராடியவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்த தந்தை பெரியாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு திருஉருவ சிலைக்கு தமிழக வெற்றி கழகத்தின் மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன். தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இந்நிகழ்வில்.மாவட்டத் இணை செயலாளர் சிவா. நகரத் தலைவர் மிதுன். மாவட்ட துணை செயலாளர் நாகராஜன். மற்றும் மாவட்ட நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் பேரூர் கழக நிர்வாகிகள். ஒன்றிய நிர்வாகிகள். மகளிர் அணி நிர்வாகிகள். மாவட்ட சார்பு அணிகள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்




# கோவிலில் பெயரால் டிரஸ்ட்கள் பண மோசடி செய்ததாக ஆட்சியரிடம் பூசாரி புகார்

சிவகங்கை, செப்.18-

சிவகங்கை மாவட்டம் செங்குளத்தை அடுத்துள்ளது நரியனேந்தல் . இந்த ஊரில் புகழ்பெற்ற ஸ்ரீ முத்தையா சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது . இந்தக் கோவிலில் பலதரப்பட்ட சமூக மக்கள் வருடந்தோறும் ஒன்றாகக் கூடி திருவிழா நடத்தி சாமி கும்பிட்டு வருகின்றனர் . இந்நிலையில் கோவிலின் மூலஸ்தான பூசாரி கார்த்திகைராஜா என்பவர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார் . அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது...... நரியனேந்தலில் உள்ள ஸ்ரீ முத்தையா சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கோவிலாகும் . இந்தக் கோவிலில் அறநிலையத்துறை ஆணையரின் சுற்றறிக்கைக்கு மாறாக கோவிலின் பெயரில் சிலர் அறக்கட்டளை தொடங்கி அதன் மூலம் பணம் வசூல் செய்து அதை மோசடி செய்து வருகின்றனர் என்றும் அறக்கட்டளையினர் கோவிலுக்கு வரும் பக்தர்களிடம் காணிக்கைகளை உண்டியலில் போட வேண்டாம் எனவும் , அதை டிரஸ்ட்டியிடம் நேரடியாக கொடுங்கள் எனவும் கூறி வருவதாகவும் இந்து சமய அறநிலையத்துறையை ஏமாற்றி வருகின்றனர் . இந்த முரண்பட்ட செயல்பாடுகள் அனைத்திற்குமே கோவிலின் இணை ஆணையர் உடந்தையாக செயல்படுவதாகவும் தெரிவித்தனர் . இந்த விவகாரம் குறித்து இணை ஆணையரை விசாரணை செய்து துறை ரீதியான நடவடிக்கை எடுத்து இடமாற்றம் செய்ய வேண்டும் எனவும் டிரஸ்ட்டின் கணக்குகளை தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் . கோவிலில் மோசடியாக செயல்படும் டிரஸ்ட்டை அரசு உடனடியாக கலைக்க நடவடிக்கை வேண்டும் . இவ்வாறு அவர் அந்த மனுவில் கூறியுள்ளார் .



# மகா துர்க்கை அம்மன் கோவிலின் முதலாம் ஆண்டு விழா

கோவை, செப்.18-

கோவை மாவட்டம் மதுக்கரை வட்டம், வழுக்குப்பாறை அடுத்துள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் எழுந்தருளி அருளும் ஆசியும் வழங்கி வரும் அருள்மிகு மகா துர்க்கை அம்மன், அருள்மிகு விநாயகர், அருள்மிகு முருகன் திருக்கோவிலில் முதலாம் ஆண்டு விழாவும், பேரூர் ஆதினம் திருப்பெருந்திரு ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாவும், அபிராமி அந்தாதி எனும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. இப்முப்பெரும் விழாவானது அருள்மிகு மகா துர்க்கை தர்மஸ்தல ஆசிரமத்தின் நிறுவனர் தவத்திரு மெய்கண்ட ஆதீனம் தலைமையில், வேள்விபூஜை, திருவிளக்கு பூஜை, சிறப்பு அபிஷேக ஆராதனை, உள்ளிட்டவை வேத மந்திரங்களுடன் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பேரூர் ஆதீனம் தவத்திரு மருதாசல அடிகளார், கௌமார மடாலயம் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், ஓதிமலை சிவநேச அடிகளார், பச்சாபாளையம் சிவநந்தி அடிகளார் ஆகியோரின் அருள் ஆசியுடன் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினர்களாக இந்து மக்கள் கட்சி தமிழகம் நிறுவன தலைவர் அர்ஜுன் சம்பத், மாநில துணைத்தலைவர் மகரிஷி மந்திராச்சலம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ செ.தாமோதரன், கலைவாணி கல்வியியல் கல்லூரி, கலைவாணி மாடல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கலைவாணி போலீஸ் அகாடமி ஆகியவற்றின் நிறுவனத் தலைவர் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டு அருள்மிகு மகா துர்க்கை அம்மன் முதலாம் ஆண்டு விழாவை சிறப்பித்தனர். அபிராமி அந்தாதி எனும் முப்பெரும் விழா மலரை கலைவாணி கல்வியியல் கல்லூரி நிறுவனத் தலைவர் வெளியிட கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் செ.தாமோதரன் இந்து மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் அர்ஜுன் சம்பத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மேலும் முதலாம் ஆண்டு விழாவில் ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு துர்க்கை அம்மனை தரிசித்து ஆசி பெற்று சென்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161